**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 108 / 2023**

**03/09/2024**

**PW1 Arumugam**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதனை எனது தரப்பு சாட்சியத்தின் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். என் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.த.ச.ஆ.1 - கடந்த 04.03.1976 அன்று எனது தாயார் தனலட்சுமி என்பவருக்கு அவரது தகப்பனார் மாணிக்க நாயக்கர் என்பவர் தாவா சொத்து சம்மந்தமாக எழுதிக் கொடுத்த தான செட்டில்மண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.2 - கடந்த 12.05.2000 அன்று எனது தாயார் தனலட்சுமி என்பவர் எனக்கு தாவா சொத்து சம்மந்தமாக எழுதிக் கொடுத்த தான செட்டில்மண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.3 - தாவா சொத்து சம்மந்தமாக நான் 01.07.2016 அன்று செலுத்தி சொத்து வரிக்கான ரசீது

வா.த.ச.ஆ.4 - தாவா சொத்து சம்மந்தமான வில்லங்க சான்றிதழ்

வா.த.ச.ஆ.5 - தாவா சொத்து சம்மந்தமாக பிரதிவாதி எனது தாயார் மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு எதிராக திருவொற்றியூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எ ண் 178/2011ல் தாக்கல் செய்த பிராதின் நகல்

வா.த.ச.ஆ.6 - தாவா சொத்து சம்மந்தமாக எனது அண்ணன் ஜெயராமன் என்பவர் எனது தாயார் மற்றும்ம எனக்கு எதிராக திருவொற்றியூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செயத அசல் வழக்கு எ ண் 254/2008ல் பிறப்பிக்கபட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.7 - அசல் வழக்கு எ ண் 254/2008ல் பிறப்பிக்கபட்ட தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்த மேல்முறையீடு வழக்கு எண் 52/2013 பிறப்பிக்கபட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.8 - எனது தாயாரின் இறப்பு சான்றிதழ்

தாவாப்படி தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.